**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 408 of 2021

எ.ம.சா.1 முத்துக்குமார்

| | |
|---|---|
| Name | : முத்துக்குமார் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 20.08.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2,3 ம்எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் 2,3 ம் எதிர்மனுதாரர்கள் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எங்களது நிறுவன களப்பணியாளர் அறிக்கை எ.ம.சா.ஆ 1. டி.என்.72.ஏ.பி.9639 என்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு சான்று எ.ம.சா.ஆ 2. டி.என்.28.ஏ.எஸ்.5747 என்ற மேக்சி கேப் வேனின் பாலிசி நகல் எ.ம.சா.ஆ 3.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

மனுதாரர் ஒட்டி சென்ற வாகனமும், மனுதாரர் மீது மோதிய வாகனமும் எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு காப்பீடுகளும் முழு காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்றால் தெரியாது. எங்களது களப்பணியாளர் குற்ற வழக்கு கோப்புகளை என்னிடம் கைப்பற்றி ஒப்படைத்துள்ளாரா என்றால் இல்லை. பொதுவாக ஒரு விபத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டால் அந்த விபத்து சம்பந்தமாக விசாரணை செய்ய களப்பணியாளர் நியமனம் செய்து வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் ஒரு களப்பணியாளரை நியமனம் செய்துள்ளோம். களப்பணியாளர் அறிக்கையின் அடிப்படையில் எதிரூரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ 1 ஆவணமானது என் மூலம் குறியீடு செய்யமுடியாது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ 1 ஆவணத்தை களப்பணியாளர் மூலமாக தான் குறியீடு செய்ய முடியும் என்றால் சரியல்ல. களப்பணியாளர் ஒரு தகுதிவாய்ந்த நபர் அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ 3, ம.சா.ஆ 4 ன்படி மனுதாருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்து 10 நிமிடங்களில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று மனுதாரர் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1 ம்எதிர்மனுதாரர் விபத்திற்கு பிறகு தன்னை தற்காத்து கொள்வதற்காக காவல்நிலையத்தில் ஒருபுகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. காவல்துறையினர் சரியான முறையில் விசாரிக்காமல் இயந்திர தன்மையில் வழக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களும் காப்பீடு செய்யப்பட்டு,

அதனை ஒட்டிய இரு நபர்களுக்கும் முறையான ஒட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கு இழப்பீடு கொடுப்பதில் இருந்து தவிர்ப்பதற்காக உண்மைக்கு மாறாக எதிரூரை தாக்கல் செய்தும், முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மீது எந்தவித குற்றச்சாட்டும் இல்லாததால் எங்களது காப்பீடு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.